26th August 2025

National Stock Exchange of India Ltd
Exchange Plaza, 5th Floor,
Plot No. C/1, G Block,
Bandra Kurla Complex, Bandra (E),
Mumbai - 400 051

BSE Limited
Corporate Relationship Department,
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai – 400 001

NSE Symbol : POCL
BSE Scrip Code : 532626

Dear Sir/Madam,

Sub: Newspaper Advertisement post the dispatch of Annual Report for the FY 2024-25 and Notice of 30th Annual General Meeting (AGM) of the Company

---

In compliance with Regulation 30 and 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, as amended, and the applicable provisions of Companies Act, 2013 read with necessary Rules, Circulars, Notifications issued by Ministry of Corporate Affairs, we enclose herewith the copies of newspaper advertisements informing about the dispatch of Annual Report for the financial year 2024-25 along with the Notice of 30th AGM through electronic mode and availability of e-voting facility to the shareholders.

Kindly take note of the above information on record.

Thanking You,

Yours faithfully,
For **Pondy Oxides & Chemicals Limited**

KRISHNAMOORTHIKUMARAVEL
Digitally signed by KRISHNAMOORTHIKUMARAVEL
Date: 2025.08.26 15:26:21 +05'30'

K Kumaravel,
Director Finance & Company Secretary.
Encl: As Above.

CPCL chairman declares 50% dividend

Chenai, Aug 26: Chennai Petroleum Corporation Limited (CPCL) declared 50% dividend on the paid-up Equity Share Capital of the company for FY 2024-25, amounting to Rs 5/- per equity share. This was announced by A.S.Sahney, Chairman, IndianOil and CPCL, at CPCL's 59th Annual General Meeting (AGM) held virtually on August 25. Mr.H.Shankar, Managing Director, Mr.Rohit Kumar Agrawala, Director (Finance), Mr.P.Kannan, Director (Operations), and Members on the Board of CPCL were present on the occasion.



Addressing the stakeholders on the occasion, Mr Sahney highlighted that during 2024-25, CPCL's Manali Refinery achieved a crude throughput of 10.45 Million Metric Tonnes (MMT), operating consistently near full capacity coupled with significant improvement in energy efficiency Fuel & Loss from 8.81% to 8.51%, Specific Energy Consumption, MBN from 72.2 % to 72.0%, Energy Intensity Index (EII) from 87.5 to 87.4 and reduction in water footprint from 6.6 MGD to 5.4 MGD.

Speaking on the financial performance, Chairman remarked that CPCL recorded the turnover of Rs 70,963 Crore and Profit after Tax of Rs.174 Crore with sustained excellence and operational resilience despite market challenges.

The Chairman also mentioned that as part of its strategic foray into the retail marketing segment, CPCL aims to move from being a stand-alone refiner to Oil Marketing Company by setting up Retail Outlets (fuel stations) across various states and ensure a balanced Pan-India presence across urban and highway markets. CPCL has got license to set up 300 Retail Outlet and will be embarking in this business shortly. Some of the future projects of CPCL includes Production of Group II/ Group III LOBS for the annual capacity of 242 KTPA at a project cost Rs 1620 Crore and feasibility study for production of microcrystalline wax and enhancement of crude processing capacity to 14 MMTPA.

Rameswaram, Kanniyakumari identified for cruise tourism feasibility studies

Chennai, Aug. 26: The Indian Ports Association (IPA) is preparing feasibility studies for developing cruise tourism hubs in Rameswaram and Kanniyakumari, while also exploring opportunities in the Andaman and Nicobar Islands. The move aims to position India's southern coastline and island territories as new centres for cruise travel.

The initiative follows a Tamil Nadu Mercantile Board survey that had identified seven to eight potential sites, including Rameswaram. The feasibility studies will be fully funded by the IPA, officials said at a press conference chaired by T.K. Ramachandran, Secretary, Ministry of Ports, Shipping and Waterways, during a workshop-cum-roadshow on projects, PPP schemes, and human resource development.

Talks are also in progress with Southeast Asian nations to establish regional cruise routes connecting Indian ports with tourist destinations in Indonesia, Malaysia, and Thailand. The IPA has already signed an MoU with Malaysia to explore opportunities, and similar agreements are expected with Jakarta and Bangkok, said IPA managing director Vikas Narwal.

The plans build on the first ASEAN-India Cruise Dialogue, hosted earlier this year in Chennai. "We have begun with domestic coastal cruises and want to extend these to neighbouring countries," Mr. Ramachandran said.

The upcoming tender for VOC Port's Outer Harbour Project will likely be floated under a revised implementation framework, updated from the 2021 version. The changes incorporate committee recommendations and stakeholder feedback, and will be released soon, Mr. Ramachandran said. The revised framework is part of broader reforms in PPP processes across major ports.

Central Bank of India sanctions Rs. 62 cr at retail loan camp

Chennai, Aug 26: The Central Bank of India, Chennai Regional Office, successfully conducted a Retail Loan Camp today, with Mr. Shashidhar, Zonal Head, Chennai, gracing the event as the Chief Guest. The camp was organized under the leadership of Pavvan Agarwal, Regional Head, and Mr. Yogendra Kumar Trivedi, Deputy Regional Head.

During the event, around 40 customers were handed over sanction letters and in-principle sanction approvals. The Retail Loan Camp, which commenced on August 7, concluded today after a highly successful run, with a total loan sanction of Rs.62 crore across various retail products.

In his address, Mr. Shashidhar highlighted the Central Bank of India's commitment to customer-centric banking and its vision to deliver superior financial services. Mr. Pavvan Agarwal, Regional Head, emphasized the pivotal role of banking in fostering inclusive economic growth and reiterated the bank's dedication to timely financial solutions for both individuals and businesses.

The event stands as a significant milestone in strengthening customer trust and accelerating business growth for the Central Bank of India in the Chennai region.

The program witnessed the active participation of Deputy Regional Head Mr. Yogendra Kumar Trivedi, along with Chief Managers and Branch Heads from across the Chennai region, ensuring the seamless execution and success of the camp.

ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி செவிலியர் கல்லூரி பட்டமளிப்பு விழா: நடிகை அம்பிகா, மேயர் சுஜாதா பட்டங்கள் வழங்கி பாராட்டு

வேலூர், ஆக. 26–

ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி செவிலியர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் நடிகை அம்பிகா மற்றும் மேயர் சுஜாதா கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பாராட்டினர்.

வேலூர் ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி செவிலியர் கல்லூரியின் பட்ட மளிப்பு விழா ஸ்ரீபுரம் நாராயணி மகாலில், ஸ்ரீநாராயணி கல்வி குழுமத்தின் இயக்குனர் பாலாஜி தலைமையில் நடைப்பெற்றது. செவிலியர் கல்லூரி முதல்வர் மருத்துவர் கீதா இனியன் அனைவரையும் வரவேற்றார். விழாவில் திரைப்பட நடிகை அம்மிகா மற்றும் வேலூர் மேயர் சுஜாதா பங்கேற்று குத்து விளக்கு ஏற்றி வைத்து பின் 366 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்புறை ஆற்றினர். இதில் நடிகை அம்பிகா பேசியதாவது.

அம்பிகா பேசுகையில், மருத்துவத துறையில் செவிலியர் பணி என்பது மிகச்சிறந்த பணி, இந்த பணிக்கு செல்ல அனுப்பிய பெற்றோர்களை பாராட்ட படவேண்டும் .இந்தஉலகில் மக்கள் மருத்துவர்களையும், செவிலியர்களையும் கடவுளாக கருதி மருத்துவமனைக்கு வருகின்றனர். அப்படி வருபவர்களிடம் மருத்துவர்களும் குறிப்பாக செவிலியர்களும் மனித நேயத்துடன் சேவை மனப்பான்மையுடன் நடந்துக் கொள்ள வேண்டும்.

மேலும் ஏழை பணக்காரர்கள் என்று பார்க்காமல், உயிராக கருதி சிகச்சைகளை அளிக்கடப்பட வேண்டும். ஜாதி, மத பேதமின்றியும் நடந்து கொள்ள வேண்டும். இதை சமுக பணியாக கருதி அர்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். படித்து முடித்து பணிக்கு செல்லும் செவிலியர்கள் தங்கள் பெற்றோர்களை கவனித்து அவர்களை பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் இக்கல்லூரியின் செய்தி மலரான கிரியா சக்தி 2025 இதழை நடிகை அம்பிகா வெளியிட்டார்.

இதில் டிரஸ்டிக்கள் எம். கலையரசன், எஸ்.இராமலிங்கம் பங்கேற்று சிறப்பித்தனர். நிகழ்ச்சியின் இறுதியில் துணை முதல்வர் ஜி. விமலா நன்றி கூறினார்.

சுயஉதவி மகளிர் குழுவுக்கு ஸ்டேட் பாங்க் ரூ.1 கோடி

சென்னை, ஆக 26–

சோமங்கலம் மீனாட்சி மஹாலில் நிதி சேவைகளின் வழிகாட்டுதலில் துறையின் கீழ், மாநில ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளையால் நடத்தப்பட்டது நிதி கல்வியறிவுக்கான செறிவூட்டல் முகாம். மக்களின் நிலையை மேம்படுத்துவதற்கும், சமூகத்திற்கான நன்மைகளுக்கும் அரசு திட்டங்களை விளக்குவதாகும் இதன் முக்கிய நோக்கம்.

நிகழ்ச்சிக்கு சென்னை வட்டம், வடமேற்கு பொது மேலாளர் எம்விஆர்.முரளி கிருஷ்ணா தலைமை தாங்கினார். ஸ்ரீ பிரசாத் கேவிஎம் நோரி சிறப்புரையாற்றினார். துணைப் பொது மேலாளர் (சென்னை தெற்கு) மற்றும் ஏ.ஜெயபால் (தலைவர் சோமங்கலம் பஞ்சாயத்து), எம். சுப்ரமணி (தலைவர் நடுவீரப்பட்டு ஊராட்சி), எம்.ஞானப்பிரகாசம் (பூந்தண்டலம் பஞ்சாயத்து தலைவர்), எம்.நித்யானந்தம் (தொகுதி மேலாளர்) ஆகியோர் பங்கேற்றார்கள்.

சுயஉதவி மகளிர் குழுவுக்கு 1.00 கோடி அனுமதி கடிதங்கள் வழங்கப்பட்டது.

கே.முத்துசெல்வி (கிளை மேலாளர், எஸ்பிஐ, சோமங்கலம்) நன்றி கூறினார்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மகளிர் அமைப்பு நடத்திய சர்வ சமய மாநாடு

சென்னை, ஆக 26–

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மகளிர் அமைப்பான லஜ்னா இமாயில்லாஹ் சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள மஸ்ஜித் மஹ்மூதில் 'பெண்கள் முன்னேற்றம்:தேசத்தின் வளமும் அமைத்திக்கான பாதை'' என்ற தலைப்பில் சர்வ சமய மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தது. இதில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றனர்.

பெண்களின் உரிமைகள் மற்றும் முன்னேற்றம் குறித்த இஸ்லாத்தின் உணமையான போதனைகளை முன் வைத்ததோடு, பல்வேறு தொழில் மற்றும் சமூக பின்னணியிலிருக்கும் பெண்களின் குரலை ஒன்றிணைத்து, பெண்கள் முன்னேற்றம் தேசிய அமைதிக்கும் செழிப்புக்கும் வழிவகுக்கும் என்பதையும் இம்மாநாடு வலியுறுத்தியது.

மாநாட்டில் தொடக்கத்தில் திருக்குர்ஆன் வசனம் ஓதப்பட்டது. பின்னர் அறிமுக உரையில், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாமம் மஹ்தி ஹஸ்ரத் மிர்சா குலாம் அஹ்மதைப் (அலை) பற்றி கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து (ஷபைத் இன் ஆக் ஷன்') என்ற தலைப்பில் ஆவணப்படம் திரையிடப்பட்டது. இதில் உலகளவில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் செய்து வரும் சேவைகளும், அதில் பெண்களின் சிறப்பான பங்களிப்பும் வலியுறுத்தப்பட்டன.

டாக்டர் நமீதா புவனேஸ்வரி (முன்னாள் இயக்குனர், அரசு கண் மருத்துவமனை), நாக அபிநயா (ஆல்பா ஜென்ஓ பிளே ஸ்கூல் நிறுவனர்), பேராசிரியர் டாக்டர் ஆர். சுனிதாபி, டாக்டர் பூர்ண சந்திரிகா (மனநல மருத்துவர்), டாக்டர் துளசி பிரியா (மகப்பேறு மருத்துவர்), டாக்டர் ஆர். பாரதி (பேராசிரியர், அரசு பல் மருத்துவக் கல்லூரி ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக பங்கேற்றுப் பேசினார்கள்.

சென்னை லஜ்னா இமாயில்லாஹ்வின் தீவிர செயலாளர், இஸ்லாமிய பெண்களின் உரிமைகள் குறித்தும், சமத்துவம், கண்ணியம் மற்றும் பெண்கள் முன்னேற்றம் பற்றிய இஸ்லாமிய கோட்பாடுகள் குறித்தும் வலியுறுத்தினார்கள்.

W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

CIN: L29142TN1961PLC004568

பதிவு அலுவலகம்: 3வது தளம், புதிய எண்.48, பழைய எண்.21, சவிதானு பில்டிங், காசா மேஜர் சாலை, எழும்பூர், சென்னை 600 008.

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தின் 5 மே 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண். 20/2020, இது தொடர்பாக வெளியிடப்பட்ட அடுத்தடுத்த சுற்றறிக்கைகளுக்கு இணங்க, W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்டின் 62வது வருடாந்திர பொதுக்கூட்டம் காணொளி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் மூலம் ("OAVM") கூட்டப்பட உள்ளது என்று நிறுவனங்கள் சட்டம், 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் பிற விதிகளின் கீழ் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, உறுப்பினர்கள் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளலாம்:

1. **வருடாந்திர பொதுக் கூட்டத்தின் தேதி மற்றும் நேரம்:** 62வது வருடாந்திர பொதுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை, 23.09.2025 அன்று பிற்பகல் 02.30 மணிக்கு (இந்திய நேரப்படி) VC/OAVM மூலம் நடைபெறும்.
2. **அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை கிடைக்கும் தன்மை:** 2024–25 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு, நிறுவனம்/வைப்பக பங்கேற்பாளர்களிடம் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிகளைக் கொண்ட உறுப்பினர்களுக்கு மட்டுமே மின்னணு முறையில் அனுப்பப்படும். இந்த அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.wsindustries.in மற்றும் பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் லிமிடெட் (www.nseindia.com) ஆகியவற்றின் இணையதளங்களில் கிடைக்கும்.
3. **வாக்களிக்கும் முறை:** நிறுவனம் தனது உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான நடைமுறைகள் பற்றிய விவரங்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும்.
4. **மின்னஞ்சல் பதிவுக்கான முந்தைய விளம்பரம்:** MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம் முன்னதாக ஆகஸ்ட் 18, 2025 அன்று பிசினஸ் ஸ்டாண்டர்ட் (ஆங்கிலம், அகில இந்திய பதிப்பு) மற்றும் மக்கள் குரல் (தமிழ், தமிழ்நாடு பதிப்பு) ஆகியவற்றில் ஒரு விளம்பரத்தை வெளியிட்டது, இதில் பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்ய / புதுப்பிக்கக் கோரியது, இதனால் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை மின்னணு முறையில் வழங்க முடியும்.
5. **மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்தல்/புதுப்பித்தல்:** நிறுவனம்/வைப்பக பங்கேற்பாளர்களிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை மின்னணு முறையில் பெறவும், வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்கவும் விரைவில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
   - O மெய்நிகர் (DEMAT) வடிவிலான பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் மூலம் பதிவு செய்யலாம்/புதுப்பிக்கலாம்.
   - O காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், தங்கள் பங்கு பதிவேடு (Folio) எண்ணை மேற்கோள் காட்டி நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவரான M/s. இன்டகிரேட்டட் ரிஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின், einward@integratedindia.in என்ற முகவரிக்கு கோரிக்கை அனுப்பி தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யலாம்/புதுப்பிக்கலாம்.
6. **பங்கேற்பு & வாக்களிப்பு:** நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு தொலைதூர மின்னணு வாக்களிப்பு வசதியை வழங்கும். முடிவுத் (Cut–off) தேதியின்படி, காகித அல்லது மெய்நிகர் (DEMAT) வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் வாக்களிக்க உரிமையுடையவர்கள்.

உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது தங்கள் வாக்குகளை மின்னணு முறையில் செலுத்த முடியும், மேலும் VC/OAVM மூலமாகவும் பங்கேற்க முடியும். விரிவான வழிமுறைகள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்படும். இந்த பொது அறிவிப்பு மேற்கூறிய MCA சுற்றறிக்கையின் பத்தி 3(A)(IV)ன் படி வழங்கப்படுகிறது.

W.S. இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்டிற்காக
ஒப்பம்/–
வெ. பாலமுருகன்
நிறுவனச் செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 26.08.2025

மணலி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்

MANALI PETROCHEMICALS

பதிவு அலுவலகம்: ''ஸ்பிக் ஹவுஸ்'', 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032.

நிபஎ: L24294TN1986PLC013087, வலைதளம்: www.manalipetro.com, மின்னஞ்சல்: companysecretary@manalipetro.com, தொலைபேசி / தொலைநகல் எண்: 044 - 2235 1098

ஆண்டுப்பேரவைக் கூட்டம் மற்றும் இதர விபரங்கள் குறித்த அறிவிப்பு

நிறுவனத்தின் 39-வது ஆண்டுப்பேரவைக்கூட்டம், **16 செப்டம்பர், 2025** செவ்வாய்க்கிழமை **அன்று மதியம்2.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொலிக்காட்சி மூலம் நடைபெறும். இக்கூட்டத்தில், கூட்ட அறிவிக்கையில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, மேற்படி கூட்ட அறிவிக்கையும், 2024-25 ஆண்டறிக்கையும் தத்தம் மின்னஞ்சல் முகவரிகளைப்பதிவு செய்து, இவற்றை மின்னனு முறையில் பெற தேர்வு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 25, ஆகஸ்ட் 2025 அன்று மின்னணு முறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவை நிறுவனத்தின், பங்குச்சந்தைகளின் மற்றும் தொலை மின்னனு வாக்குச் சேவையாளரின் பின்வரும் வலைத்தளங்களிலும் கிடைக்கப்பெறும்: www.manalipetro.com, www.bseindia.com, www.nseindia.com & www.evotingindia.com

பேரவைக்கூட்டத்தில் பங்கேற்கவும், பேசுவதற்குமான முறை

பேரவைக்கூட்ட காணொலி நிகழ்வு சென்ட்ரல் டெபாஸிடரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடட் (CDSL) நிறுவனத்தின் இ-வோட்டிங்க் அமைப்பின் மூலம் நடைபெறும். கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வசதி 16.09.2025 அன்று மதியம் 1.45 மணி முதல் 2.15 மணி வரை இருக்கும். இதன் வழி முறைகள் கூட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

கார்பொரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள பொதுச்சுற்றறிக்கைகள் படி கூட்டத்தில் பங்கு கொள்ள பதிலிகளை நியமிக்கமுடியாது, உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

கூட்டத்தில் பேசிட விரும்புவோர், காமியோ கார்புரேட் நிறுவனத்தின் வலைதளம் https://investors.cameoindia.com மூலம் திங்கட்கிழமை, 08.09.2025 காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) முதல் வெள்ளிக்கிழமை, 12.09.2025 மாலை 5.00 மணிக்குள் (இந்திய நேரப்படி) பதிவு செய்து கொள்ளலாம். கூட்டம் நடைபெறும் போதோ, அல்லது இதர வழிகளிலோ பதிவு செய்து கொண்டு பேச வசதி இருக்காது.

கூட்டத்தில் பேச விரும்பாத, ஆனால் அங்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள அலுவல்கள் குறித்து விபரம் வேண்டுவோர் தங்கள் வினாக்களை மின்னஞ்சல் மூலம் companysecretary@manalipetro.com என்ற முகவரிக்கு தங்கள் பெயர், பங்கு விபரங்கள், கைபேசி எண் போன்ற விபரங்களுடன் வெள்ளிக்கிழமை, 12.09.2025க்கு முன்னர் அனுப்பி வைக்கலாம். அவற்றிற்கான விளக்கங்கள் உரிய முறையில் அனுப்பிவைக்கப்படும்

பங்குப்பதிவு முடக்ககாலம்

உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்குப்பதிவுப்புத்தகங்கள் 09.09.2025 முதல் 16.09.2025 முடிய முடங்கி இருக்கும் என கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 91ன்படி இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. (குறிப்பிட்ட இரண்டு நாட்கள் உட்பட)

ஈவுத்தொகை உறுதி மற்றும் விநியோகம்

2024-25 ஆண்டுக்கான ஈவுத்தொகை உறுப்பினர்களால் மேற்படி கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டால், செப்டம்பர் 08ம் தேதி அன்று வர்த்தக முடிவு நேரத்தில் பயனாளிகள் பட்டியலில் உள்ள பங்குதாரர்கள், மற்றும் செப்டம்பர் 16ம் தேதி அன்று உறுப்பினர் பதிவேட்டில் உள்ள பங்குதாரர்களுக்கு, குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் வழங்கப்படும்.

01.04.2024 முதல், ஈவுத்தொகை மின்னனு முறையில் மட்டுமே அனுப்பப்படும். குறிப்பிட்ட நேரத்திற்குள் ஈவுத்தொகையினை பெற்றுக்கொள்ள, பங்குதாரர்கள் தத்தம் வங்கி கணக்கு விவரங்களை முன்னதாகவே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆணைப் பத்திரங்கள் அனுப்பபட மாட்டாது.

மேலும், மேற்படி ஈவுத்தொகையிலிருந்து வருமானவரிப்பிடித்தம் செய்யப்படும். இதைத்தவிர்க்க விரும்புவோர், வருமானவரி விதிகளின்படி Form 15G/15H சமர்ப்பிக்கலாம். இது குறித்த மேல் விபரங்களுக்கு கூட்ட அறிவிக்கையைப் பார்க்கவும்.

கூட்டத்திற்கு முன் தொலை மின்னணு வாக்குப்பதிவு

கம்பெனிச் சட்டப் பிரிவு 108 மற்றும் அதன் கீழான விதிமுறைகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் & வெளியீட்டுத் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் 44ம் கூற்றின்படி, உறுப்பினர்கள் பேரவை கூட்டத்தின் நடவடிக்கைகள் மீது தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்திட CDSL நிறுவனத்துடன் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்கான முறைகள் கூட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 09, 2025 (தகுதி நாள்) அன்று நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தொலை மின்னணு அல்லது பேரவைக் கூட்ட இடத்தில் வாக்கெடுப்பில் பங்குகொள்ளலாம்.

ஆண்டறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டபின் தகுதி நாளுக்கு முன் உறுப்பினரான நபர்கள் ஆண்டறிக்கையை இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கேமியோவை தொடர்பு கொள்ளலாம். மேற்படி நபர்கள் தொலைதூர மின்னணு வாக்களிக்க விரும்பினால், புகுபதிகை விவரங்களை கேமியோவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செப்டம்பர் 11, 2025 வியாழக்கிழமை காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) முதல் செப்டம்பர் 15, 2025 திங்கட்கிழமை மாலை 5 மணி முடிய (இந்திய நேரப்படி) மின்னணு வாக்குப்பதிவு செய்யலாம். இதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு செய்திடும் வசதி இருக்காது. மின்னணு வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்ட இடத்தில் வாக்களிக்கலாம். மின்னணு முறையில் வாக்களித்தவர்கள் பேரவை கூட்டத்தில் பங்கு கொள்ளலாம் ஆனால் வாக்களிக்க முடியாது.

வாக்கு முடிவுகள் விதிகளில் குறிப்பிட்டவாறு பங்குச்சந்தைகட்கு அறிவிக்கப்படும் மற்றும் நிறுவனம் மற்றும் CDSL இணையதளங்களில் வெளியிடப்படும்.

மேலும் விளக்கங்கள் பெற

மின்னணு வாக்குப்பதிவு மற்றும் காணொளி மூலம் கூட்டத்தில் பங்கு கொள்ளுதல் மீதான சந்தேக விளக்கம் பெற உறுப்பினர்கள் CDSL-ன் இணையதளத்தில் (www.evotingindia.com) உள்ள கையேட்டையோ, சந்தேக விளக்க வினா விடைகளையோ பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். இவ்வகையில், வேறு ஏதேனும் சிரமங்கள் இருந்தால், உறுப்பினர்கள் திரு. ராகேஷ் டால்வி அவர்களை CDSL, 25வது மாடி, மராத்தான் பியுச்சரக்ஸ், மஃபத்லால் மில்ஸ் காம்பௌண்ட், என் எம் ஜோசி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400 013. உதவிமையம்: 1800 21 09911 மின்னஞ்சல்: helpdesk.evoting@cdslindia.com அல்லது கேமியோ நிறுவனத்தையோ அல்லது இவ்வறிக்கையில் கையெழுத்திட்டவரையோ தொடர்பு கொள்ளலாம்.

இயக்குநர் குழு ஆணைப்படி
மணலி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்டிற்காக
க. ஸ்ரீ விக்னேஷ்
நிறுவனச் செயலர்

தேதி : 26.08.2025
இடம் : சென்னை

பங்குதாரர்கள் தங்கள் கோரப்படாத/பணமாக்கப்படாத ஈவுத்தொகையினை மற்றும் இதர அறிவிப்புகளைப் பெற்றுக்கொள்ள, நிறுவனத்திடமோ, எங்கள் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரிடமோ, அல்லது டெபாசிடரி பார்ட்டிசிபன்டிடமோ தங்களின் முகவரி, வங்கிக் கணக்கு சம்பந்தமான மற்றும் KYC விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

NAME CHANGE

I,OLD NAME : Komal Vardhaman Gangwal
DATE OF BIRTH : 07.10.1997
Father Name - Vardhaman Indarchand Gangwal
Mother Name - Vandana Vardhaman Gangwal
Husband Name : Arihant Jain
Address :Osian Heights 7th Floor Ekavali Block,76 Basin Bridge Road Chennai - 600001
SHALL HENCEFORTH BE KNOWN AS
New Name - Komal Jain
OLD NAME : Komal Vardhaman Gangwal

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர், தாம்பரம்
ந. க. எண். 02745/2025

J.ராஜேஷ் குமார், த/பெ. ஜெயவேல், No. 2/1032, நடேசன் தெரு, பெரும்பாக்கம், சென்னை 600100.
..... மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் தன் அத்தை, M. **வள்ளியம்மாள்,** த/பெ. முருகேசன் No. 2/1032, நடேசன் தெரு, பெரும்பாக்கம், சென்னை 600100, என்ற விலாசத்தில் கடந்த **14.04.2019** அன்று இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய தவறி விட்டதால், தற்போது இறப்பை பதிவு செய்துக் கொள்ளுமாறுஎதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், தங்கள் ஆட்சேபனையை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி தாம்பரம்,வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரிலோ, அல்லது, வழக்கரிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

க. அசோகன்,
இரா. உமாகோபாலகிருஷ்ணன்,
செல். 9444948940, 8248165050
மனுதாரரின் வழக்கரிஞர்கள்.

In the Court of District Munsiff cum Judicial Magistrate at Sholinganallur
O.S.No.346 of 2024

Mrs. Sita ...Plaintiff
Vs
T.Murali & Others ...Defendants

அறிவிப்பு

மேற்படி வழக்கின் பிரதிவாதிகள் கடைசியாக தெரிந்த முகவரி சென்னை–600041, எண்.2/13 ல் கொட்டிவாக்கம், நியூ காலனி, முதல் தெரு, திரு.தணிக்காசலம் மகன் திரு.T.முரளி (101), சென்னை 600 030, செனாய் நகர், கஜபதி தெரு, எண்.15ல் வசிக்கும் திரு.சுப்ரமணியன் மகன் திரு. அரிஹரசுதன் சுப்ரமணியன் (D2) மற்றும் வேலூர், செண்பாக்கம்–632 008, கன்சாய்பேட்டை3, காந்தி நகர், எண்.38/Aல் வசிக்கும் திரு. அமீன்.R.S. (D4), அறிவது யாதெனில் மேற்படி வழக்கின் வாதி தங்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை கோரி மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கானது மேற்படி கோர்ட்டார் சமூகத்தில் 17.09.2025 அன்று தாங்கள் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் தங்களுக்கு ஏதேனும் ஆட்பேனை இருப்பின் தாங்கள் நேரடியாகவோ அல்லது தங்களின் வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி தேதியன்று காலை 10.30 மணியளவில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக தீர்பாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

K.Venkatesan
Kaushik N.Sharma
வாதியின் வழக்கறிஞர்கள்

மாண்புமிகு வருவாய் கோட்டாசியர் வடசென்னை கோட்டம், சென்னை-66
ந.க.எண்.அ2/517/2025
நாள்: 14.08.2025

பெறுநர்
திருமதி.சரோஜா, க/பெ.சிங்காரம், இலக்கம் 67/121, 5வது குறுக்கு தெரு, F பிளாக், தணிகாசலம் நகர், பொன்னியம்மன் மேடு, மாதவரம் நகராட்சி, சென்னை-600 110.
...மனுதாரர்

எதிராக

மாண்புமிகு வருவாய் கோட்டாசியர் வடசென்னை கோட்டம், காந்திநகர் பிரதான சாலை, புழல், சென்னை-600 066
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் **திருமதி.சரோஜா,** என்பவரின் தந்தை **திரு.V. கோவிந்தசாமி** என்பவர் கடந்த **25.01.1990** அன்று இறந்ததை பதிவு செய்யாமல் விடுபட்டதால், அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் காலதாமத இறப்பாக பதிவு செய்ய உத்தரவு வழங்கக் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதன் மீது எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த **விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள்** வடசென்னை கோட்டம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபணையைத் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப் படும் என்பதை அறியவும்.

வருவாய் கோட்டாசியர்
வடசென்னை கோட்டம்

மாண்புமிகு மூன்றாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருச்சிராப்பள்ளி
I.A.No.3/2025
IN
O.S.No:137/2022

A.செலஸ்டின் பிரியா
த/பெ.S.அல்போன்ஸ்ராஜா
எண்.B 902, SIS ACROPOLE அப்பார்ட்மென்ட்ஸ், எடமலைப்பட்டி புதூர், திருச்சி-12.
மனுதாரர் /வாதி

எதிர்

கனேஸ் @ நவீன் ஆன்ரூஸ்
த/பெ.சு.மு.சீனிவாசன்
எண்.யு 43, ஸ்டெர்லிங் லிட்டில் பிளவர்ஸ்,குடவாந்தேரி, சென்னை.600064.
எதிர்மனுதாரர் /பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வாதி, பிரதிவாதிக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு எண்.137/2022 தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கின் விசாரணை வரும் 18.09.2025 தேதியன்று போடப்பட்டுள்ளது. இதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் 18.09.2025 காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ முன்னிலையாகி தெரிவித்துக்கொள்ளலாம். தவறினால் மேற்படி வழக்கு எதிர்வரில்லா நிலையில் ஒரு தலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை இதன் முலம் அறியவும்.

E.RAMESH (M.A.,B.L.,)
ADVOCATE
No.6, (C-22), 4th Cross,
West Extension, Thillainagar,
Trichy-18

பெயர் மாற்றம்

(தஸ்லிம்) THASLIM, கணவர் பெயர்: S.SYED ABTHUL KAREEM, பிறந்த தேதி: 25/05/1982, நெ.39, Langi Garden Road, புதுப்பேட்டை, சென்னை–600 002, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **THASLIM AHAMEDA** என்று அழைக்கப்படுகிறேன்.

(தஸ்லிம்) THASLIM

பெயர் மாற்றம்

Rani Krishnappa Naidu, கணவர் பெயர்: Varadhan, பிறந்த தேதி: 10.01.1957, ப.நெ.88, பு.நெ.29, ப்ளாட் T-2, 3வது மாடி, கிறிஸ்டல் ஹோம்ஸ், AH பிளாக், 5வது தெரு, அண்ணா நகர், சென்னை – 600 040, என்ற முகவரியில்வசிக்கும் நான் இனி **RANI VARADHAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Rani Krishnappa Naidu

பாண்டி ஆக்சைட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட் POCL®

CIN: L24294TN1995PLC030586

பதிவு அலுவலகம் : 4வது மாடி, கேஆர்எம் சென்டர், எண்.2, ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600 031

Telephone: 044 – 42965454; Fax : 044 – 42965455 E-mail : kk@pocl.com; Website : www.pocl.com

30வது வருடாந்திர பொதுக்கூட்டம், மின்னணு வாக்குப்பதிவு தகவல் மற்றும் புத்தகம் மூடல் தேதி பற்றிய அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய பிரிவுகள், எம்சிஏ சுற்றறிக்கைகள் மற்றும் சுற்றறிக்கை எண்கள். 21/2021 தேதியிட்ட டிசம்பர் 14, 2021, 2/2022 தேதியிட்ட மே 5, 2022, 10/2022 தேதியிட்ட டிசம்பர் 28, 2022, 09/2023 தேதியிட்ட செப்டம்பர் 25, 2023 மற்றும் 09/2024 தேதியிட்ட செப்டம்பர் 19, 2024 தேதியிட்ட சுற்றறிக்கைகள் ஜனவரி 13, 2021, மே 5, 2020, ஏப்ரல் 8, 2020 மற்றும் ஏப்ரல் 13, 2020 (ஒட்டுமொத்தமாக "MCA" சிற்றறிக்கைகள் என குறிப்பிடப்படுகிறது) செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (''SEBI'')யினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண்கள் SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2024/133 தேதியிட்ட அக்டோபர் 3, 2024, SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 தேதியிட்ட அக்டோபர் 7, 2023, SEBI/HO/CFD/PoD-2/P/CIR/2023/4 தேதியிட்ட ஜனவரி 5, 2023, SEBI/HO/CFD/CMD2/CIRP/P/2022/62 தேதியிட்ட மே 13, 2022, SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 தேதியிட்ட ஜனவரி 15, 2021 மற்றும் SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 தேதியிட்ட மே 12, 2020 (ஒட்டுமொத்தமாக ''செபி சிற்றறிக்கைகள்'') ஆகியவற்றின் கீழ் கம்பெனியின் பங்குதாரர்களுக்கான பாண்டி ஆக்சைட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்டின் 30வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) வியாழக்கிழமை, செப்டம்பர் 18, 2025 அன்று மாலை 03.00 மணிக்கு காணொளி காட்சி (VC) / இதர ஒலி ஒளி சாதனங்கள் (OAVM) மூலமாக நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, பங்குதாரர்கள் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(a) கம்பெனி / பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர் (ஆர்டிஏ) / வைப்புத்தொகை பங்கேற்பாளரிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு 2024–25 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் கூடிய 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மின்னணு முறையில் அனுப்பப்பட்டது. மேலும், SEBI (LODR) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 36(1)(b)ன்படி, 2024–25 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் 30வது ஆண்டு பொதுக்கூட்டத்தின் அறிவிப்பு ஆகியவற்றை அணுகக்கூடிய சரியான பாதையுடன் கூடிய இணைய இணைப்பு அடங்கிய கடிதம், மின்னஞ்சல் ஐடிகளைப் பதிவு செய்யாத அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(b) தொடர்புடைய அனைத்து சட்ட ஆவணங்களையும், உள்ளடக்கிய வருடாந்திர அறிக்கை கம்பெனியின் இணையதளம் https://www.pocl.com/annual-reports/ மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளங்களான நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளமான https://www.nseindia.com மற்றும் பாம்பே ஸ்டாக் எக்சேஞ் இணையதளமான www.bseindia.com மற்றும் சிடிஎஸ்எல்–ன் இணையதளமான www.evotingindia.comல் கிடைக்கும் (VC / OAVM மூலம் வசதியை வழங்கும் நிறுவனம்).

(c) பங்குதாரர்கள் VC / OAVM வசதி மூலம் மட்டுமே 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் மற்றும் அதன் விவரங்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் VC / OAVM வசதி மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பங்குதாரர்கள் கூட்டத்தில் கோரம் கண்டறியும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

(d) **புத்தகம் மூடல். ஈவுத்தொகை :** 30வது வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டியும், ஈவுத்தொகை வழங்குவதற்காகவும் உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் வெள்ளிக்கிழமை, 12 செப்டெம்பர் 2025 முதல் வியாழக்கிழமை, 18 செப்டெம்பர் 2025 முடிய (இரண்டு நாட்களும் சேர்த்து) மூடப்பட்டிருக்கும்.

2024–25ம் நிதியாண்டுக்கான ஈவுத்தொகை, 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டால், வியாழக்கிழமை, செப்டம்பர் 11, 2025ம் தேதி அலுவலக நேரம் முடிவதற்குள் வைப்புத்தொகையாளர்களின் உறுப்பினர் பதிவேட்டில் உள்ள உறுப்பினர்களுக்கும் டெபாசிட்டரிகளால் வழங்கப்பட்ட விவரங்களின்படி, பங்குகளின் பயனாளிகளுக்கும், உரிமையாளருக்கும் வழங்கப்படும்.

கம்பெனியின் RTA / DP உடன் வங்கிக் கணக்கு விவரங்களைப் புதுப்பித்த பங்குதாரர்களுக்கு ஆன்லைன் முறைகள் மூலம் ஈவுத்தொகை மின்னணு முறையில் செலுத்தப்படும். வங்கி கணக்கு விவரங்களை புதுப்பிக்காத பங்குதாரர்கள் தங்கள் வங்கி மற்றும் பிற தொடர்புடைய விவரங்களை கம்பெனியின் RTA / DP உடன் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(e) மின்னணு வாக்குப்பதிவு வழிமுறைகள் :

- CDSL வழங்கிய மின்னணு வாக்குப்பதிவு முறையை (மின்னணு வாக்குப்பதிவு) பயன்படுத்தி 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் பங்குதாரர்கள் தங்கள் வாக்குகளை பதிவு செய்யும் வசதி வழங்கப்படும். இது 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளது.
- அறிவிப்பை அனுப்பிய பிறகு நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, கட் ஆஃப் தேதியில் பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும், 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்ட உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குவதற்கான செயல்முறையைப் பின்பற்றலாம்.
- வியாழக்கிழமை, 11 செப்டெம்பர் 2025 அன்று (''கட் ஆப் தேதி'') பங்குதாரர்கள் வைத்திருக்கும் ஈக்விட்டி பங்குகளின் விகிதாச்சாரத்தில் வாக்களிக்கும் உரிமைகள் இருக்கும்.
- தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை, 15 செப்டெம்பர் 2025 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி புதன்கிழமை, 17 செப்டெம்பர் 2025 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடைகிறது. இந்த காலகட்டத்தில், கட்ஆப் தேதியன்று, காகித அல்லது டிமெட்டீரியலைஸ்ட்டு வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் மின்னணு முறையில் தங்கள் வாக்குகளை அளிக்கலாம். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு அப்பால் தொலைதூர மின்னணு வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.
- தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த பங்குதாரர்கள் 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய முடியாது.

நிதிச் சட்டம், 2020ன்படி, 1 ஏப்ரல் 2020 முதல் பங்குதாரர்களின் ஈவுத்தொகை வருமானத்திற்கு வரி விதிக்கப்படும் மற்றும் வருமான வரிச் சட்டம் 1961 (ஐடி சட்டம்) கீழ் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஈவுத்தொகையில் கம்பெனி வரி பிடித்தம் செய்ய வேண்டும். பொதுவாக, டிடிஎஸ் தேவைகளுக்கு இணங்க, பங்குதாரர்கள் வருமான வரி சட்டத்தின்படி தங்களுடைய குடியிருப்பு நிலை, பான், வகையை தங்கள் டிபி உடன் பூர்த்தி செய்ய மற்றும் / அல்லது புதுப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கம்பெனி / ஆர்டிஏ–உடன் காகித வடிவில் பங்குகளை வைத்துள்ளவர்கள் 11 செப்டெம்பர், 2025 அன்றோ அல்லது அதற்கு முன்போ ஆவணங்களை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக 23 ஜூலை 2025 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் திரு. கிருஷ்ணா சரண் மிஸ்ரா, M/s. கேஎஸ்எம் அசோசியேட்ஸ், பயிற்சி நிறுவன செயலாளர்கள், சென்னை, அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.

தலைவர் அல்லது அவர் இல்லாத நிலையில் நிர்வாக இயக்குநர் அல்லது இது சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட நபர் 20 செப்டெம்பர் 2025 சனிக்கிழமையன்று அல்லது அதற்கு முன் கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு முடிவுகளை அறிவிப்பார் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கம்பெனி உறுப்பினர்களின் தகவலுக்காக மின்னணு வாக்குப்பதிவு முடிவுகள் மற்றும் ஆராய்வாளரின் அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.pocl.comல் வைக்கப்படும் மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தெரிவிக்கப்படும்.

மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக ஏதேனும் கேள்விகள் / குறைகள் இருப்பின் அது குறித்து உறுப்பினர்கள் மேலே குறிப்பிட்ட தொடர்பு விவகாரங்களில் திரு. கே. குமரவேல், இயக்குனர் நிதி மற்றும் நிறுவன செயலாளர் அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

பாண்டி ஆக்சைட்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
கே. குமரவேல்
இயக்குனர் நிதி மற்றும் நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 26.08.2025